சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.114/2022</u>

15.10.2025

வா.சா.1 திரு. செல்வம், த/பெ. நடராஜன்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து எனது சகோதரர் சரவணனால் வாங்கப்பட்டது என்றால் சரிதான். காலிமனையாக வாங்கி பின்னிட்டு வீடு கட்டினார் என்றால் சரிதான். எனது சகோதரர் குவைத்தில் வேலை பார்த்துவந்தார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் குமரன், பரமேஸ்வரி, தாமரைசெல்வி என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் நான் மட்டும் தான் அரசு பணியிலிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது குடும்பத்தில் எனது வார்த்தைக்கு மற்ற உறுப்பினர்கள் மரியாதை கொடுப்பார்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் உறுப்பினர்களுக்கிடைய பிரச்னை ஏற்பட்டால் என்னை ஆலோசனை கேட்டு ஏற்றுக்கொள்வார்கள் என்றால் சிலவற்றை ஏற்றுக்கொள்வார்கள், சிலவற்றை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வழக்கு பிரச்னைக்கு முன்பு குடும்பத்தில் உள்ள அனைவரும் என்னிடம் கேட்டு தான் செயல்படுவார்கள் என்றால் சரிதான். எனது தம்பி சரவணனை குவைத் நாட்டிற்கு நான் தான் செலவு செய்து அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். எனது தந்தைக்கு பின்னிட்டு எனது குடும்பத்தில் நான் கர்த்தாவாக இருந்தேன் என்றால் சரிதான். எனது ஆலோசனையின் அடிப்படையில்தான் எனது சகோதரர்கள் செயல்பட்டார்கள் என்றால் சரிதான். குவைத் நாட்டிலிருந்து எனது சகோதரர் பணம் எதுவும் இங்கு அனுப்பியதில்லை. பிரதிவாதி தாமரைசெல்வி எனது அக்கா என்றால் சரிதான். தாமரைசெல்வி மகளை எனது சகோதரருக்கு எனது பெற்றோர் விருப்பத்தின் பேரில் திருமணம் செய்துவைத்தார்கள். திருமண பத்திரிக்கையில் எனது பெயர் போடப்பட்டுள்ளது என்றால் எனது அக்கா பெயரும், எனது சகோதரர் குமரன் பெயரும், என் பெயரும் போடப்பட்டுள்ளது. திருமண பத்திரிக்கையின் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். குவைத் நாட்டிலிருந்து சரவணன் அனுப்பிய தொகையை வைத்து என் தகப்பனார் 2003 ஆம் ஆண்டு வீடு கட்டினார் என்றால் சரிதான். சரவணன் 2005 ஆம் வருடம் இரண்டு தவணைகளில் ரூ.95,000/- அனுப்பியுள்ளார்

என்றால் சரிதான். 2005 ஆம் வருடம் வீட்டின் வேலை 90 சதவீதம் மட்டும் முடிவடைந்து எனது பெற்றோர் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது ஒரு மாடி மட்டுமே கட்டப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. இரண்டு மாடி கட்டப்பட்டிருந்தது. சரவணனுக்கு 2010 ஆம் வருடம் திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். 2010 ஆம் வருடம் திருமணம் முடிந்த பின்னிட்டு மனைவியை இந்தியாவில் விட்டுவிட்டு குவைத்துக்கு சென்றார் என்றால் சரிதான். அதனால் எனது சகோதரி அவரின் மகளான சரவணன் மனைவிக்கு துணையாக இருந்தார் என்றால் சரிதான். அப்போது எனது அக்கா கரூரில் இருந்தார். நான் சொல்வது போல் என் அக்கா கரூரில் இல்லை என்றாலும், தன் மகளுடன் தான் வசித்து வந்தார் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரியா பத்தூர், புதுத்தெருவில் வசித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கரூரில்தான் வசித்து வந்தார்கள். எனக்கு திருமணம் ஆனபோது 6 மாதங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு பழவனக்குடிக்கு சென்று குடியிருந்தோம் என்றால் சரிதான். பின்னிட்டு புலிவலத்தில் 2 வருடம் குடியிருந்தோம் என்றால் சரிதான். நான் புலிவலத்தில் 1998, 1999 ல் குடியிருந்தேனா என்றால் இருக்கும். அதற்கு பின்னிட்டு காரைக்காலில் வசித்தேன் என்றால் சரிதான். காரைக்கால் தான் எனது மாமனார் வீடு என்றால் சரிதான். காரைக்காலில் 5 வருடங்கள் இருந்தேன். பின்னர் 2000 ஆம் வருடம் திருவாரூருக்கு வந்தேன் என்றால் சரிதான். திருவாரூரில் தொழுவனங்குடியில் இடம் வாங்கி 2016 ல் வீடு கட்டினேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு வரை நான் வாடகை வீட்டில் குடியிருந்தேன் என்றால் சரிதான். ரகு என்பவர் சரவணனுடன் குவைத்தில் பணிபுரிந்தவர் ஆவார். சரவணன் ரகுவிடம் ரூ.5,00,000/- கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 20.12.2010 தேதியிட்ட எழுதியிருந்த கடிதம் நான் எழுதியது என்றாலும் அதிலுள்ள வாசகம் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது என்றாலும் சரிதான். அந்த கடிதத்தின் அசல் பி.வா.சா.ஆ.2 ஆகும். என்னிடம் காட்டப்படும் 09.05.2010 தேதியிட்ட கடிதம் நான் எழுதியது என்றாலும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது என்றாலும் சரிதான் அந்த கடிதம் பி.வா.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்படும் 18.11.2006 சரவணனுக்காக ரூ.1,00,000/- டிடி மூலமாக கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ள வாசகங்கள்

என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். 18.11.2006 தேதியிட்ட 3 வரவு காசோலைகளின் நகலின் மீது என்னால் எழுதப்பட்டு கொடுத்த கடிதம் பி.வா.சா.ஆ.4 ஆகும். பாக்கி ரூ.4,00,000/- த்திற்காக நான் எழுதிக்கொடுத்த ஆவணம் தான் பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான். சரவணனுக்கு இந்தியாவில் எந்தவித வருமானமும் கிடையாது என்றால் சரிதான். சரவணனால் கடனை திரும்ப செலுத்துவதற்கு போதிய ஆவணம் காட்ட இயலவில்லை என்றால் சரிதான். எனது சகோதரருக்கு வங்கியில் கடன் கொடுக்காததால் என் பெயரில் வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் எழுதிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. திருவாரூர் லெட்சுமிநாராயணா கூட்டுறவு வங்கியில் உள்ள பொறுப்பாளர்கள் நன்கு பழக்கமானவர்கள் என்றால் இல்லை. 1997 ஆம் வருடத்திலிருந்து லெட்சுமிநாராயணா கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இருந்துவருகிறேன். லெட்சுமிநாராயணா கூட்டுறவு வங்கியில் நான் அடிக்கடி கடன் வாங்குவேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்பட்ட பின்னிட்டு 11.12.2010 அடமானம் வைத்தேன் என்றால் சரிதான். அடமானத்தொகையை நான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் யாரிடம் கடன் வாங்கினேனோ அவர்களிடம் கொடுத்தேன். அந்த கடனை ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டும் என்பதற்காக பி.வா.சாஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். முதல் மாத தவணையை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி வாங்கினேன் என்றால் சரிதான். பின்னர் சரவணன் மனைவி பிரியா 19.01.2011 ல் ஒரு தவணையை செலுத்தியுள்ளார் என்றால் என்னிடம் காட்டப்படும் ரசீது பிரியா செலுத்தியதுதான் என்றாலும் 19.01.2011 தேதியிட்ட ரசீது பி.வா.சா.ஆ.5 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது சகோதரர் குவைத் நாட்டிலிருந்து வெஸ்டர்ன் மணி மூலமாக எனக்கு செலுத்தியுள்ள ரசீதுகள் என்றால் சரிதான். அந்த பணம் சகோதரரை நான் குவைத்துக்கு அனுப்பியதற்காக செலவு செய்ததை திரும்ப கொடுத்தது ஆகும். 05.07.2014 தேதியிட்ட ரசீது அசல் பி.வா.சா.ஆ.6 ஆகும். எனது வழக்கறிஞர் மூலம் 25.05.2022 அன்று பிரதிவாதி தாமரைசெல்விக்கு வா.சா.ஆ.14 ன்படி அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் நான் சரவணனை ரூ.1,36,000/- செலவு செய்து குவைத்துக்கு அனுப்பியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பை சொத்தை சுவாதீனம் கேட்டு அனுப்பினேன். பின்னிட்டு வா.சா.ஆ.15 ஆவணம் படி தாமரைசெல்வி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். பதிலறிவிப்பு அனுப்பிய பிறகு

வழக்கிற்காக நான் ரூ.1,36,000/- கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் வெளிநாட்டிலிருந்து 2016 ல் இந்தியா வந்தார் என்றால் சரிதான். 2017 ஆம் வருடம் எனது சகோதரர் வெளிநாட்டிலிருந்து வந்த பின்னிட்டு புது வீடு கட்டி கிரஹபிரவேசம் செய்தார் என்றால் இல்லை, சரவணனுக்கு குழந்தை இல்லாததால் யாகம் செய்தார். சரவணனுக்கு தாவா வீட்டைதவிர வேறு வீடு இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 20.08.2016, 22.10.2016, 07.09.2017, 28.12.2017, 09.01.2018, ஆகிய தேதிகளிட்ட ரசீதுகளின் படி தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு சரவணன் பணம் செலுத்தி டைல்ஸ் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த ரசீதுகள் பி.வா.சா.ஆ.7 ஆகும். 2010 ஆம் வருடம் என் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்டுக்கு பின்னிட்டு 2016 ஆம் வருடம் சரவணன் வீட்டை புதுப்பித்து கட்டினார் என்றால் சரிதான். என் சகோதரர் 2010 லிருந்து குடியிருப்பதாகவும், நான் வீட்டிற்கு வரும் போது கணக்கு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னதால் அவர் செலவு செய்தார். நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி அனுமதி வாங்கி பின்னிட்டுதான் வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. 2010 ஆம் வருடம் சரவணனை வெளிநாட்டிற்கு அனுப்பியபோது பெற்ற கடனை திரும்ப கொடுக்கவில்லை என்பதால் எனது மனைவி தாவா சொத்துள்ள வீட்டிற்கு சென்று எனது பெற்றோரிடம் தகராறு செய்தார் என்றால் சரிதான். தகராறு செய்த பின்னிட்டு அசிங்கம் ஏற்பட்டதால் தான் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் சகோதரர் 2017 ஆம் வருடம் வெளிநாட்டிலிருந்து வந்தபோது அடமான கடன் முழுவதையும் திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. பணத்தை வாங்கி வைத்துக்கொண்டு நான் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணத்தின் படி தொகையை செலுத்தி நான் ரசீதை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 3 வருடத்திற்கு ஒரு முறை வங்கியில் கடன் வாங்கி செலுததியுள்ளேன்.தொழுவங்குடியில் நான் ரூ.1,00,00,000/- செலவு செய்து வீடு கட்டினேன் என்றால் இல்லை. 1300 சதுரடியில் வீடு கட்டியுள்ளேன். நான் வீடு கட்ட ரூ.70,00,000/- செலவு செய்திருப்பேன் என்றால் இல்லை. வீட்டை முன்னின்று கட்டிக்கொடுத்தது குமரன் என்றால் சரிதான். பணிநிமித்தமாக சரவணனை குவைத்திற்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். குவைத்தில் இருந்த போது மாரடைப்பால் எனது சகோதரர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கடனை முழுவதும் என்னிடம் செலுத்திய பின்னிட்டு சரவணன் பெயரில்

சொத்தை பெயர் மாற்றம் செய்துகொடுத்த பின்னிட்டுதான் குவைத்திற்கு சென்றார் என்றால் சரியல்ல. 2006 ஆம் வருடத்திலிருந்து சரவணன் இறக்கும் வரை தாவா சொத்துள்ள வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் அடிப்படையில் நான் சொத்தை சுவாதீனம் எடுக்கவில்லை என்றால் எனது பெற்றோர்கள் வசித்ததால் நான் எடுக்கவில்லை. செட்டில்மெண்ட் ஆவணம் என் பெயரில் பெயரளவுக்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. செட்டில்மெண்டை ரத்து செய்து சரவணன் பெயருக்கு ஆவணம் மாற்றி கொடுக்க கேட்டபோது ஆவணம் வரவில்லை என்பதால் மாற்றி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 12.05.2005, 21.07.2005 தேதியிட்ட பிஈசி மூலமாக வழங்கப்பட்ட ரசீதுகளில் கண்ட தொகைகள் எனக்கு அனுப்பப்பட்டது என்றால் வீடு வாங்கியதற்கா, கட்டியதற்கா என்று தெரியவில்லை. அந்த ரசீதுகள் பி.வா.சா.ஆ.8 ஆகும். 27.10.2011, 19.11.2011 ஆகிய இரு தேதிகளில் தவணை தொகையை செலுத்ததாதல் எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு நான் சரவணன் மனைவியிடம் அந்த அறிவிப்பை கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பின் அசல் பி.வா.சா.ஆ.9 ஆகும். தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு சரவணன் மனைவி என் பெயரில் 20.03.2017 ல் வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அந்த ரசீது பி.வா.சா.ஆ.10 ஆகும். பிரதிவாதி அவரின் குடும்பத்தினருடன் தாவா சொத்தில் உள்ள வீட்டில் குடியிருந்த போது வழங்கப்பட்ட குடும்ப அட்டையின் நகல்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். குடும்ப அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.11 ஆகும். என்னிடம் காட்டப்படும் கேஸ் சிலிண்டர் ரசீதுகள் பிரியா பெயருக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ரசீதுகள் பி.வா.சா.ஆ.12 ஆகும். ( எண்ணிக்கை - 19) எனது தம்பி மனைவி பிரியாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், ஆனால் தற்போது மறுமணம் செய்துவிட்டார். அடமானத்திற்காக பெறப்பட்ட கடன் தொகை முழுவதையும் சரவணன் என்னிடம் கொடுத்ததை நான் வைத்துக்கொண்டு முழுவதுமாக கட்டாமல் மாத தவணையில் செலுத்திவிட்டுபாக்கி தொகையை எனது சொந்த செலவிற்கு வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. தொகையை பெற்றுக்கொண்டு சரவணன் பெயருக்கு ஆவணத்தை மாற்றிகொடுக்காமல் காலதாமதம் செய்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு 2017 ல் கிரஹபிரவேசம் செய்யப்பட்டது என்றால் இல்லை. குழந்தையில்லாததற்காக பூஜை செய்தார்கள்.

உண்மையில் கிரஹபிரவேசம் செய்யப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிய பின்னிட்டு சரவணனை வீடு கட்ட அனுமதித்து 02.04.2017 ல் புதுமனை புகுவிழா செய்ய அனுமதித்துள்ளதால் தற்போது முரண்தடை தோஷத்தால் மறுப்பதற்கு தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் குவைத்தில்இறந்த போதும் அவரது இறுதிசடங்கிற்காக தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு தான் கொண்டு வரப்பட்டது என்றால் சரிதான். எனது தம்பி மனைவிக்கு மறுமணம் செய்யவேண்டும் என என் அக்கா குடும்பத்தினர் பேசினார்கள், நான் கலந்துக்கொள்ளவில்லை. எனது சித்தப்பா பெயர் சுப்பிரமணியன் என்றால் சரிதான். சுப்பிரமணியன் மகள் கவிதா வீட்டிற்கு சென்று நானும் பேசினேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணியன் மைத்துனர் மகனை பிரியாவிற்கு இரண்டாவது திருமணம் செய்துவைத்தோம் என்றால் சரிதான். பிரியாவிற்கு திருமணம் செய்ய உறவினர்கள் முன்னிலையில் ஒத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதே போல் தாவா சொத்தை திருமணத்திற்கு பின்னிட்டு பிரியா பெயரில் மாற்றிக்கொடுக்க ஒப்புக்கொண்டு விட்டு தற்போது மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பம் தி.மு.க.கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் 27.03.2022 ல் தி.மு.க.ஒன்றிய செயலாளர் பாலச்சந்திரன் முன்னிலையில் குடும்ப பிரச்னை பற்றி பேசினோம் என்றால் சரிதான். அதில் குருமூர்த்தி, அண்ணாதுரையும் மற்றும் எனது குடும்ப உறுப்பினர்களும் கலந்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். என் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். பேச்சுவார்த்தையின் போது தாவா சொத்தை பெயர் மாற்றம் செய்துக்கொடுக்க ரூ.15,00,000/- கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். நானும் அதற்கு ஒப்புக்கொண்டேன். ஆனால் பணம் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் ரூ.15,00,000/- கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் ரூ.4,00,000/- மட்டுமே கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. தற்போது ரூ.15,00,000/- கொடுத்தால் பெயர் மாற்றம் செய்துக்கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் மதிப்பு ரூ.10,00,000/- இருக்கும். செட்டில்மெண்ட் தாவா சொத்தில் தரைதளம் மற்றும் முதல் தளம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ரூ.15,00,000/- கேட்டு பிரதிவாதி கொடுக்கவில்லை என்பதால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு ஆவணம்

என் பெயரில் உள்ளதை சாதகமாக எடுத்துக்கொண்டு பெயர்மாற்றம் செய்துக்கொடுக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் உண்மையானது இல்லை என்பதால் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்பதால் சுவாதீனம் மட்டும் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.